# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

***************

**ஊடக அறிக்கை**

**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகளில் கலந்துகொண்ட உயர் ஸ்தானிகர்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரண்டாவது ஆண்டு நினைவினை குறிக்கும் முகமாக புனித அந்தோனியார் தேவாலயத்தில் 2021 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற சிறப்பு பிரார்த்தனைகளில் உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்கள் கலந்துகொண்டிருந்தார். தாக்குதலில் பலியானவர்களின் நினைவாக மெழுகுவர்த்தி தீபமேந்தி பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்த அவர், தாக்குதலின் பின்னரான காலத்திலும் பல தாக்கங்களை எதிர்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் அவற்றிலிருந்து விடுபடவேண்டும் எனவும் பிரார்த்தித்திருந்தார்.

2. அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் அடங்கிய பரிசு தொகுதியுடன் இந்தியாவிலிருந்து விசேட விமானம் ஒன்றின் மூலமாக 2020 மே 8ஆம் திகதி இலங்கையை வந்தடைந்த உயர் ஸ்தானிகர் தனது 14 நாட்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னரான முதலாவது நாளிலேயே அதாவது 2020 மே 23ஆம் திகதி அன்று குறித்த தேவாலயத்திற்கு வருகை தந்து தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அஞ்சலி செலுத்தி வழிபட்டிருந்தமை நினைவில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும். 2019 ஜூன் மாதம் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் இலங்கைக்கான தனது கூட்டொருமைப்பாட்டு விஜயத்தின்போது இத்தலத்திற்கு வருகைதந்து அஞ்சலி செலுத்தி வழிபட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

3. பத்து இந்தியர்களும் உயிரிழந்த இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இலக்கு வைக்கப்பட்டிருந்த பல இடங்களில் புனித அந்தோனியார் தேவாலயமும் ஒன்றாகும். ஷங்கிரி லா, கிங்ஸ்பரி மற்றும் சினமன் கிராண்ட் ஆகிய ஹோட்டல்களில் தங்கியிருந்த இந்தியர்களே சூத்திரதாரிகளின் தாக்குதலில் உயிரிழந்தனர்.

4. பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து கோணங்களிலும் மிகவும் நெருக்கமான ஒத்துழைப்புடன் இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளும் செயற்பட்டு வருகின்றன. பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டங்களில் இலங்கை மக்களுடனும் அரசாங்கத்துடனும் இந்தியா மிகவும் உறுதியாக இணைந்துள்ளது அத்துடன் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை முறியடிப்பதிலும் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**************

கொழும்பு
21 ஏப்ரல் 2021